**செய்தி வெளியீடு எண்: 131/2023** **நாள்: 07.11.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**திரு.வி.க.பூங்காவில், ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு சென்னை மெட்ரோ இரயில் தலைமை பொது மேலாளர் ரேகா பிரகாஷ் நடைபயணத்தை தொடங்கி வைத்தார்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், கேப்டன் ஸ்ரீனிவாச மூர்த்தி மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு செனாய் நகர் மெட்ரோ, திரு.வி.க.பூங்காவில் நடைபயணம் நடைபெற்றது. நடைபயணத்தை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர் (வடிவமைப்பு) ரேகா பிரகாஷ் தொடங்கி வைத்து நடைபயணத்தில் கலந்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், தலைமை பொது மேலாளர் ரேகா பிரகாஷ் தெரிவித்ததாவது:

2016 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நவம்பர் 10-ஆம் தேதி ஆயுர்வேத தினமாக கொண்டாடப்படுகிறது. 8-வது ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு கேப்டன் ஸ்ரீனிவாச மூர்த்தி மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் 'ஒரு ஆரோக்கியத்திற்கான ஆயுர்வேதம் - ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவருக்கும் ஆயுர்வேதம்' என்ற கருப்பொருளை மையமாக கொண்டு அக்டோபர் 9 முதல் நவம்பர் 10, 2023 வரை பல்வேறு இடங்களில் ஆயுர்வேத மருத்துவ முகாம் மற்றும் பொது மக்களுக்கும் பல்வேறு அரசு நிறுவனங்களுக்கும் மருந்து செடிகளை விநியோகித்து வருகிறது.

இதனைத் தொடர்ந்து செனாய் நகர் மெட்ரோ, திரு.வி.க.பூங்காவில் நடைபயணம் நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட மருந்து செடிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கேப்டன் ஸ்ரீனிவாச மூர்த்தி மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவி இயக்குநர் மற்றும் நிறுவனப் பொறுப்பாளர் டாக்டர். ஆர்.இளவரசன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் துணை பொது மேலாளர் கே.ஆர்.தங்கராஜ் (ஒப்பந்த மேலாண்மை), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**